| | |
|---|---|
| **Website** | Nanayanvikatan.com |
| **Link** | http://www.vikatan.com/personalfinance/article.php?module=nanayam&aid=10615 |
| **Date** | 31.08.2015 |



Posted Date : 17:25 (31/08/2015) Last updated : 17:25 (31/08/2015)

# பெண்கள் நிதியளவில் தங்களை மேம்படுத்திக் கொள்ள...!



ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்வதில் திறமையானவர்கள் ஆண்களா? பெண்களா?. நிச்சயம் பெண்கள்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதிலும், வேலைக்குப் போகும் பெண்கள், வீடு, அலுவலகம் என இரண்டு இடங்களிலும் பம்பரம்போல் சுழன்று அனைத்தையும் சமாளிப்பவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் இவர்களின் உழைப்பெல்லாம் பெரும்பாலும் வீணாகிறது. காரணம் தங்கள் நிதியை எப்படி மேலாண்மை செய்ய வேண்டும் என்பது தெரியாமல் இருப்பதுதான்.

எனவே பெண்கள் தங்களைத் தாங்களே நிதியளவில் மேம்படுத்திக்கொள்வது அவசியமாகிறது. அது அவர்களுக்கு மேலும் கூடுதல் வலிமையைக் கொடுக்கும்.



எப்படி பெண்கள் தங்களைத் தாங்களே நிதியளவில் மேம்படுத்திக்கொள்வது என்பதை விளக்குகிறார்,

ஃப்ராங்க்ளின் டெம்பிள்டன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் இந்தியா நிறுவனத்தின் தலைவர் ஹர்ஷேந்து பிந்தால்

இன்று, வீட்டிலிருந்து கோட்டை வரை பெண்கள் சிறந்து விளங்கினாலும், ஒட்டு மொத்தமாக பெண்களை மேம்படுத்துவதில் இப்போதும் பெரிய இடைவெளி இருக்கத்தான் செய்கிறது. பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதிலும், பெண்களின் நிதி மேம்பாட்டை வளர்ப்பதிலும் பெரிய சவால்களைப் பார்க்கிறேன்.

பெண்கள் முடிவெடுக்க தயாராக வேண்டும்:

பெரும்பாலான வீடுகளில், பெண்கள் தங்கள் சம்பாத்யத்தை என்ன செய்ய வேண்டும், எதில் முதலீடு செய்ய வேண்டும் போன்ற முடிவுகளை, அவர்களது தந்தையோ கணவரோ தான் எடுக்கிறார்கள். பெண்கள் சொல்கிற இடத்தில் கைெயழுத்து மட்டுமே போடும் நிலையில் இருக்கின்றனர்.